### கல்வி நிதியை விடுவிக்கக் கோரி

# தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த மனுவை அவசர வழக்காக விசாரித்திடுவீர்!

## உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு முறையீடு!

சென்னை, ஜூன் 10 -

தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு தர வேண்டிய கல்வி நிதி நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், அதை விடுவிக்க உத்தரவிடக் கோரி தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த மனு நிலுவையில் உள்ள நிலையில், அதை அவசர வழக்காக விசாரிக்க கோரி தமிழ்நாடு அரசு சார்பில் உச்சநீதி மன்ற தலைமை நீதிபதியிடம் முறையீடு செய்யப் பட்டு உள்ளது.

ஒன்றிய அரசு தமிழ்நாடு அரசுக்கு தர வேண்டிய, ரூ.2,151 கோடி நிதி, அதற்கு 6% வட்டியுடன் சேர்த்து ரூ.2,291 கோடி வழங்கக் கோரிய வழக்கில், ஒன்றிய கல்வி நிதியை விடுவிக்க கோரி தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த மனுவை அவசரமாக விசாரிக்க வேண்டுமென்று உச்ச நீதி மன்றத்தில் தமிழ்நாடு அரசு முறையீடு செய்துள்ளது.

முன்னதாக, ஒன்றிய அரசு ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தில் (சமக்ர சிக் ஷா அபியான்) தமிழ்நாட்டுக்கு தரவேண்டிய ரூ.2 ஆயிரத்து 152 கோடி நிதியை ஒதுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறது. இந்த நிதியை உடனடியாக வழங்க வேண்டும் என்று ஒன்றிய அரசை, தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. கல்வி நிதி தொடர்பாக பிரதமர் மோடிக்கு தமிழக அரசு பல முறை கடிதம் எழுதியுள்ளது. ஆனால் தேசிய கல்வி கொள்கையின்படி மும் மொழி கொள்கையை அமல் படுத்தாவிட்டால் தமிழ்நாட்டுக்கு இந்த நிதியை ஒதுக்க முடியாது என்று ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அறிவித்தார். அவரது அறிவிப்புக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தார்.

மேலும் ஒன்றிய அமைச் சரின் அறிவிப்பை கண்டித்து தமிழகத்தில் பல்வேறு இடங்களில் போராட்டங்கள் நடைபெற்றன. இந்த நிலையில் ஒன்றிய அரசு நிறுத்தி வைத் துள்ள கல்வி நிதியை வழ ங்கக்கோரி, உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடரப்படும் என முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் அறிவித்து இருந்தார்.

அதன்படி, தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசு மீது மே 20ந்தேதி அன்று கல்வி தொடர்பாக வழக்கு பதிவு செய்துள்ளது. மனுவில், அதன்படி தமிழ்நாட் டுக்கு நியாயமாக தர வேண்டிய கல்வி நிதியை விடுவிக்க ஒன்றிய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என மனு தாக்கல் செய்துள்ளது.

அந்த மனுவில் தமிழக அரசு கூறியிருப்பதாவது: பி.எம். ஸ்ரீ, சமக்ரா சிக்ஷா திட்டத்தின் நிதியை நிறுத்தி வைத்தது சட்டவிரோதம். புதிய கல்வி கொள்கையை அமல்படுத்தாத தால் நிதியை நிறுத்தி வைப்பது ஏற்புடையதல்ல. கல்வி திட்டத்துக்கான நிலுவை நிதி வழங்கப்படவில்லை. தமிழக அரசுக்குக் கிடைக்க வேண்டிய கல்வி நிதி இல்லாததால் தமிழ்நாட்டில் இருக்கும் மா ணவர்களின் நலன் பாதிக்கப் படுகிறது. சமக்ரா திட்டத்துக்கான நிதியை 6% வட்டியுடன் ரூ.2,291 கோடி வழங்க உத்தர விட வேண்டும்.

இவ்வாறு தமிழக அரசு கூறியுள்ளது.

ஒன்றிய அரசுக்கு எதிரான இந்த மனுமீது விரைவில் விசாரணை நடைபெறும் என எதிர்பார்த்த நிலையில், மனு இதுவரை விசாரணைக்கு பட்டியலிடப்பட வில்லை. அதனால், தமிழ்நாடு அரசின் கல்வி நிதி தொடர்பான வழக்கை அவசர வழக்காக விசாரிக்க கோரி தமிழ்நாடு அரசு சார்பில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியிடம் முறையீடு செய்யப் பட்டு உள்ளது.

### மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. தலைமையில்

# சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் ப.பிரகாஷ் வேண்டுகோள்!

சென்னை, ஜூன். 10 -

சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ப.பிரகாஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (10.6.2025 செவ்வாய்க் கிழமை) மாலை 6 மணியளவில், மாவட்டக் கழக அலுவலகம், எண். 20/32, காம்தார் நகர் முதல் தெரு, நுங்கம்பாக்கத்தில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. தலைமை வகிக்கிறார். சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் (ப.பிரகாஷ்) நான் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறேன்.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் மற்றும் பகுதி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் இளைஞர் அணி ஆக்கப் பணிகள்.

இவ்வாறு சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ப.பிரகாஷ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கத்தார் திமுக அயலக அணி சார்பாக கேக் வெட்டி சிறப்பாக கொண்டாடப்பட்டது. துணை அமைப்பாளர்கள் ஆரூர் பாலாஜி, கத்தார் ப.அப்துல் ரஷீத் தலைமையிலும், துணை அமைப்பாளர்கள் மேலூர் மதன், ஜி.எஸ்.ஆர். சத்தியராஜ், பரந்தாமன், ஹக்கீம் மற்றும் முகமது ரபீக் ஆகியோர் முன்னிலையிலும், கத்தார் தி.மு.க. அயலக அணி நிர்வாகிகளான தஞ்சை ஜி.செந்தில், குரும்பூர் தாஹிர், விக்னேஷ், சதீஷ், பவித், இப்திகார், சவுக்கத் அலி,அருள், சுதானந்தம், கங்காதரன்,மெய்யநாதன், ஷேக் அப்துல்லா, பங்கேற்புடன் அமைப்பாளர் மதன் குமார் ஒருங்கிணைப்பிலும் நடைபெற்ற இந்த நிகழ்வில் , கூட்டணி கட்சி நிர்வாகிகள்,கத்தார் வாழ் தமிழ் அமைப்புகளின் நிர்வாகிகள் மோகன் குமார், ரவீந்திர பிரசாத், ராம செல்வம், வலியுல்லா சேன்,கத்தாரில் , திருமதி வாசுகி சத்யபாபு , திருமதி வானேஸ்வரி மோகன், இப்ராஹிம் யாசின், முகிலன், ரியாஸ், தொகுப்பாளர் ஆர்.ஜே. மிரண்டா, பெண்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்..




